ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல்

**கி.அன்பழகன், முனைவர் பட்ட ஆய்வாளர்**

**முனைவர் தி. பார்த்திபன், உதவிப் பேராசிரியர்**

**மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் – 613 010.**

anbumithun3018@gmil.com & drparthiban1980@gmail.com

35

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழரின் சிறந்த விழுமியங்களுள் தலைசிறந்த விழுமியமாக விருந்தோம்பல் போற்றப்பட்டுள்ளது. தமிழரின் இப்பண்பானது தொல்குடி முதல் தொன்றுதொட்டு சிறந்து விளங்கியுள்ளதை சங்கத் தமிழ் நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது. விருந்து உபசரிக்கும் பண்புகளுள் அன்பு, அக மகிழ்வு, இன்சொல், தியாகம் போன்றவை சிறப்பிடம் பெற்றுள்ளதை அறியலாம். இந்த பண்பில் மன்னர்கள், அன்பில் சிறந்த அடியார்கள், சாதாரண மக்கள் மற்றும் வறுமையுற்றவர்களும் சிறந்து விளங்கியுள்ளனர் என்பதும் அறியப்படுகிறது. இது இல்லற ஒழுக்கங்களுள் தலையாய அறமாகவும் போற்றப்பட்டுள்ளது.

**முக்கிய வார்த்தைகள்**

வாழை இலை, விருந்தோம்பல் அறம், தமிழர் பண்பாடு, விழுமியங்கள், சங்ககால விருந்தோம்பல், வள்ளன்மை, இல்லறக் கடமை.

**முன்னுரை**

விருந்தோம்பும் பண்பு என்பது எல்லா நாட்டினருக்கும் பொதுவான பண்பாக இருந்துள்ளது. இருப்பினும் நம் பண்டைய தமிழரின் விருந்தோம்பல் பண்பானது தலைசிறந்து விளங்கியுள்ளது. இச்சிறப்பை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மற்றும் சேக்கிழார் பெரியபுராணம் போன்றவற்றின் வாயிலாக அறிய முடிகிறது. தமிழரின் விருந்து உபசரிப்பானது சிறந்த முறையாக மற்ற சமூகத்திலிருந்து வேறுபட்டும், வியக்கத் தக்கதாகவும் இருந்துள்ளதை உணர முடிகிறது.

**விருந்து-சொல் விளக்கம்**

‘விருந்தோம்பல்’ – என்ற தமிழ்ச் சொல்லை ஆங்கிலத்தில் ‘ஹாஸ்பிட்டாலிட்டி’ என்று அழைப்பர். இச்சொல்லானது ‘ஹாஸ்பெஸ்’ என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பெறப் பட்டதாகும். ‘விருந்து’ – என்ற சொல்லிற்கு ‘புதுமை’ என்று பொருள். நம் இல்லத்திற்கு வரும் அறிமுகம் இல்லாத புதியவருக்கு இன்முகத்துடனும் அன்புடனும் அகமகிழ்ந்து சுவையான உணவளிப்பதே ‘விருந்தோம்பல்’ என்பதாகும்.[1]

உழைத்து சேர்த்த பொருள்களையெல்லாம் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு விருந்து உபசரிப்பதற்கேயாகும். இந்த பண்பே இல்லறத்தாரின் தலையாகக் கடமை என சங்கத் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.[2]

**தமிழர் பண்பாடும் விழுமியங்களும்**

'பண்பாடு' – சொல்விளக்கம்: 'பண்படு' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியதே பண்பாடு ஆகும். இச் சொல்லிற்கு சீர்படுத்துதல், செம்மைப்படுத்துதல் என்பது பொருள். மனித மனத்தை உயர்ந்த எண்ணங்களால் செம்மைப் படுத்த வேண்டும் என்பதே இதன் பொருள்.

**தமிழர் பண்பாடு**

பழந்தமிழர் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கினர். அவர்கள் தனிமனித ஒழுக்கத்திலும், சமுதாய ஒழுக்கத்திலும் மேன்மை பெற்றிருந்தனர். இதற்குப் பல சான்றுகளும் உள்ளன. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களின் ஒருமித்த நடத்தைகளும், எண்ணங்களுமே பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. 'உலகம் என்பது உயர்தோர் மேற்றே' என்கிறது தொல்காப்பியம். இங்கு உயர்ந்தோர் என பண்பாடு உடையவர்களையே குறிக்கிறது. 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்கிறார் வள்ளுவர். தமிழர்கள் அன்பு, ஈகை, புகழ், பெரியோரை மதித்தல், மனித நேயம் போன்ற உயரிய பண்புகளுடன் வாழ்ந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியப் பாடல்கள் மூலம் அறியலாம்.

**தமிழரின் தலைசிறந்த விழுமியங்கள்**

விருந்தோம்பல், நட்பு, காதல், அன்பு, வீரம், மானம், கற்பு, கொடை, புகழ், வள்ளன்மை, வாய்மை, உதவி போன்ற உயரிய விழுமியங்களுள் பண்டையத் தமிழர் விருந்தோம்பும் பண்பில் தலைசிறந்து விளங்கியுள்ளனர்.[3]

**தமிழரின் விருந்து உபசரிப்பு**

**"செல்விருந்துஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு" - குறள்:86**

வீட்டிற்கு வந்த விருந்தினரை அகமகிழ்ந்து விருந்து உபசரித்து வழியனுப்பி இனி வரும் விருந்தினரை எதிர்பார்த்து இருப்பவனை சான்றோர்கள் போற்றுவார்கள் என்கிறார் வள்ளுவர்.[4]

தம் இல்லம் நாடி வந்தவர்களை அமரச்செய்து நலம் விசாரித்து நீர் அல்லது மோரைக் கொடுத்து முக மலர்ச்சியுடன் வரவேற்பர். விருந்து அளிப்பதற்கு முன் கை கழுவத் தூய தண்ணீர் கொடுப்பர். தரைவிரிப்பில் அமரச்செய்து தலை வாழைக் குருத்து இலையின் அகண்டப் பகுதியை விருந்து உண்பவரின் வலது பக்கம் இருக்கும்படி செய்வர். இலையின் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு வகைகளை வைப்பார்கள். வலது ஓரத்தில் கீரை, கூட்டு, காய்கறி முதலியவற்றை வைப்பார்கள். இலை நடுவில் அன்னமிடுவார்கள். உண்பவர் மனமறிந்து அவர்கள் விரும்பிச் சாப்பிடுவதை மீண்டும், மீண்டும் பரிமாறுவார்கள். குடிப்பதற்கு நீர் வைப்பார்கள்.

விருந்து உண்டு முடித்தப் பிறகு கைகழுவ தண்ணீரும், கைத் துடைப்பதற்கு துண்டும் கொடுப்பார்கள். ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு வைத்து கொடுப்பார்கள். விருந்தினரை வாசல் வரை பின்தொடர்ந்து வழியனுப்பி வைப்பார்கள்.

**"அல்லில் ஆயினும் விருந்து வரின்**
**உவக்கும்" - நற்றிணை (142)**

நள்ளிரவில் விருந்தினர் வந்தாலும் அவர்களை மகிழ்வுடன் வரவேற்று விருந்து உபசரிக்கும் நற்பண்பு நம் தமிழரிடம் இருந்துள்ளது.[5]

**தமிழர் மரபில் விருந்தோம்பல்**

விருந்தோம்பலின் சிறப்பினைக் கூறாத தமிழ் இலக்கியங்களே இல்லை எனலாம். தமிழ் நூல்களில் போற்றப்பட்ட விருந்தோம்பல் செய்திகள் சிலவற்றைக் காண்போம்.

**தொல்காப்பியர் தொல்காப்பியத்தில்**

**'விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**

**பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்'**

(தொல்காப்பியம் – பொருளதிகாரம், கற்பியல் -150:3-4)

விருந்தினரைப் பாதுகாத்தலும், சுற்றத்தாரைப் பாதுகாத்தலும் குடும்பத்தலைவியரின் தலையாயப் பண்புகளாக தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.[6]

**விருந்தினர் பேணல்**

முன்பின் அறியாத, தெரியாத புதியவர்களே விருந்தினர் ஆவர். இதில் நாடு, இனம், மொழி, மதம் என்ற எந்த வேறுபாடும் பார்க்காமல் அகமகிழ்ந்து வரவேற்று விருந்து உபசரிப்பதே தமிழரின் தலைசிறந்த பண்பு ஆகும்.

ஒரு சமூகத்தின் சிறந்தப் பண்பாட்டை விளக்குவது அவர்களுடைய விருந்தோம்பும் பண்பே ஆகும். ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை ஒய்வில்லாமல் உபசரிப்பதன் காரணமாக, தன் கணவனுடன் ஊடல் கொள்ள நேரமில்லை என்ற நற்றிணை செய்தி நமக்கு வியப்பாக உள்ளது.

**நன்மனை நனி விருந்து அயரும்**

**கைதூவின்மையின், எய்தாம் ஆறே. - (நற்றினை:280)**

**தமிழர் பண்பாடு**

பழந்தமிழர் உலக மக்கள் அனைவரையும் ஒரே இனமாக கருதியதும், உறவினர்களாக ஏற்றுக் கொண்டதும் சிறந்தப் பண்பாகும்.

**'யாதும் ஊரே, யாவதும் கேளிர்' – (புற:பா:162)**

என்ற கணியன் பூங்குன்றனாரின் பாடல் வரி தமிழரின் பண்பாட்டிற்குச் சான்றாகும்.

**மனைவியின் மாண்பு**

கற்புடைய மனைவியரின் கடமைகளாவன, முகமலர்ந்து விருந்தினரை உபசரிக்கும் பண்பு, கணவனுக்கு சிறந்த நண்பனாகவும், தாயாகவும், குலப்பெருமை விளங்க குழந்தைகளைப் பெறுவது நல்ல மனைவியின் கடமைகளாகும். இக்கருத்தை விளக்கும் பாடல்,

நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம்; வைகலும் இல்புறம் செய்தலின் ஈன்றதாய் – தொல்குடியின் மக்கள் பெறலின் மனைக்கிழத்தி, இம் மூன்றுமே கற்புடையாள் பூண்ட கடன். (திரிகடுகம்: பாடல் 64)

இல்லத்தரசியானவள் தன் குடும்பம் சார்ந்த உறவினர் யாராகிலும் அவர்கள் மீது அன்பு காட்டி ஆதரிக்க வேண்டும். விருந்தினர்களை உபசரிக்க வேண்டும், தெய்வத்தையும் கணவனையும் எந்நாளும் வணங்க வேண்டும். தன் கணவனின் வருமானத்திற்குள் செலவு செய்து வாழ்க்கை நடத்த வேண்டும்

என்ற கருத்தை சிறுபஞ்சமூலம் மூலம் அறியலாம்.

வருவாய்க்குத் தக்க வழக்கு அறிந்து, சுற்றம் வெருவாமை, வீழ்ந்து, விருந்து ஓம்பித் – திரு ஆக்கும் தெய்வத்தையும் எந்நான்றும் தேற்ற வழிபாடு செய்வதே, பெண்டிர் சிறப்பு.

(சிறுபஞ்சமூலம்: பாடல் – 43)

விருந்தினரை மனமகிழ்ந்து இன்சொல் பேசி வரவேற்று உபசரிக்கும் பண்புள்ளவர்கள் மறுமை இன்பத்தை அடையலாம் என்பதை ஏலாதி-யின் செய்யுள் விளக்குகிறது.

இன்சொல், அளாவல், இனிது ஊன் யாவர்க்கும் வன்சொல் களைந்து வகுப்பானேல் – மென்சொல் முருந்து ஏய்கும் முட்போல் எயிற்றினாய்! நாளும் விருந்து ஏற்பர் விண்ணோர் விரைந்து.

(ஏலாதி: பா:07)

சங்க இலக்கியங்கள் மேலும் பல இடங்களில் விருந்தோம்பல் பண்பினைப் போற்றியுள்ளன. [7]

**செயற்கரிய விருந்தோம்பல்**

**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே**

**சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.**

என்று ஔவையார் மூதுரைக்கேற்றவாறு பழந்தமிழர்கள் வறுமையுற்ற நிலையிலும் விருந்து உபசரிப்பதை கைவிடாமல் வாழ்ந்துள்ளனர்.[8]

சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தில் இளையான்குடி மாறனாரின் விருந்தோம்பற்பண்பினை உலகிற்கு உணர்த்தியுள்ளார். கார்காலத்து மழையில் நனைந்தபடி வீட்டு வாசலில் நின்ற சிவனடியார்க்கு அமுது படைக்க முதல்நாள் வயலில் விதைத்த முலையிட்ட நெல்மணிகளை சேற்றுடன் அள்ளி நீரில் கழுவி சூடு செய்து உமிநீக்கி சோறாக்கினார். அடுப்பில் தன் வீட்டின் கூரையில் இருந்த மூங்கிலை விறகாக்கினார். கறி சமைக்க கீரைகளை சமைத்து அடியார்க்கு அமுது படைத்தார். தான் வறுமையுற்ற காலத்திலும், பசியால் வாடிய போதும் விருந்து உபசரிப்பதை கைவிடாத பண்பு செயற்கரியது.

தனது செல்வமகன் மூத்த திருநாவுக்கரசு பாம்பு தீண்டி இறந்ததையும் மறைத்து அப்பூதியடிகளார் அப்பர் சுவாமிக்கு விருந்து படைக்க விரும்பினார். கலிங்கத்துப்பரணி பாடிய செயங்கொண்டார் போரில் உயிருக்குப் போராடிய வீரர்களின் உடம்பை கழுகுகளும் பருந்துகளும் கொத்தித் தின்ற போதும் முகமலர்ந்து கிடந்தனர் என்கிறார்.

…… பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்பதும முகம் மலர்வாரைக் காண்மின் காண்மின்."[9]

சிவனடியார்க்கு அவர் விரும்பிக்கேட்ட தனது தவப் புதல்வனையே கறிசமைத்துக் கொடுத்த சிறுத்தொண்ட நாயனார். விருந்து அளிப்பதற்கு பொருளில்லாமல், ஒருவன் தன் வீர வாளையும் ஈடுவைத்த செய்தியை புறநானூற்றுப் பாடல் வாயிலாக அறியலாம்.

விருந்தினரின் பசியைப் போக்கத் தன் வாழ்நலனுக்காகப் பயிரிட வைத்திருந்த விதைத்தினையை உரலில் இட்டுக் குத்திப் பசி போக்கிய செய்தியைப் புறநானூற்றுப் பாடல் (316) மூலம் அறியலாம். மேலும் தமிழர் மரபில், மிகப்பழங்காலந்தொட்டே தமிழர்கள் பலர் வியத்தகு

விருந்தோம்பல் செய்துள்ளனர். [10]

**நிறையுரை**

உலகில் தோன்றிய முதல் மொழி தமிழ் மொழி, முதல் இனம் தமிழினம், முதல் நாகரிகம் தமிழர் நாகரிகம் என்பது அறிஞர்களின் கருத்து ஆகும். தமிழர் பண்பாடு உலக அளவில் போற்றப்படுவதற்கு அவர்கள் கடைபிடித்த தனி மனித இல்லற, சமூக ஒழுக்கங்கள் அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. இவற்றுள் இல்லற ஒழுக்கமும் அவற்றுள் விருந்தோம்பலும் மிகவும் போற்றப்படுகிறது.

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு" குறள்: 81

இல்லறத்தில் மனைவி மக்களோடு பொருளை ஈட்டி காத்து வாழும் வாழ்க்கை எல்லாம், விருந்தினரை இனிய முகத்தோடு வரவேற்று உபசரித்து காப்பது ஆகும். தமிழர்கள் எந்த நிலையிலும் தன் நிலை மாறாமல் விருந்து உபசரித்து வந்துள்ளனர். இதனை காலம் காலமாகக் கடைபிடித்து தமிழினத்திற்கு பெருமை சேர்த்துள்ளதை உணர்த்தும் நோக்கத்தில் இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**துணைநூற்ப் பட்டியல்**


1. இணையதள முகவரி https://ta.m.wikipedia/wiki
2. இணையதள முகவரி https://paarvaionline.com
3. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வெளியீடு, பதினொன்றாம் வகுப்பு அறவியலும் இந்தியப் பண்பாடும் பாடப் புத்தகம், பக்.11, 15.
4. ஆவராணி ஆனந்தன், தினமும் ஒரு திருக்குறள், சுரதா வெளியீட்டகம், சிக்கல் 611108, குறள் 86.
5. இணையதள முகவரி www.freebooks.com , பத்தாம் வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகம், விருந்து போற்றுதல் 3.1.
6. இணையதள முகவரி https://www.aranjournal.com
7. சாமி சிதம்பரனார், தமிழர் வாழ்வும் பண்பாடும், சாரதா பதிப்பகம் சென்னை- 14, டிசம்பர் 2011, பக். 153, 154,369, 393, 401.
8. ரமணன். பா.சு, சேக்கிழாரின் பெரிய புராணம், தாமரை பிரதர்ஸ் மீடியா, மதுரை- 3, ஆகஸ்ட் 2020, ப. 70.
9. தட்சணாமூர்த்தி. அ, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம் சென்னை- 40, மே 2023, ப. 79.
10. சகுந்தலை.ச, பெரியபுராணம், மங்கை வெளியீடு, சென்னை -18, டிசம்பர் 2010.